

கழகத் தலைவர், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் 72வது பிறந்த நாளை முன்னிட்டு, கரூர் மாவட்ட தி.மு.க. சார்பில், கரூர் மாநகராட்சியில் 48 வார்டுகள், 157 ஊராட்சிகள், 3 நகராட்சிகளில் 21 வார்டுகள், 8 பேரூராட்சிகளில் 24 இடங்கள் என மொத்தம் 250 இடங்களில் நடைபெற்ற விளையாட்டு திருவிழாவில் முதல் பரிசு பெற்றவர்களுக்கு, மாவட்ட அளவிலான விளையாட்டு போட்டிகளை கரூர் திருவள்ளுவர் விளையாட்டு மைதானத்தில் மாவட்டக் கழகச் செயலாளரும், மின்சாரம் மதுவிலக்கு ஆயத்தீர்வை துறை அமைச்சருமான வி.செந்தில் பாலாஜி துவக்கி வைத்தார். எம்.எல்.ஏ.க்கள் இரா.மாணிக்கம், ஆர்.இளங்கோ, க. சிவகாமசுந்தரி, மாநில, மாவட்ட, மாநகர, நகர, ஒன்றிய, பேரூர் செயலாளர்கள், அணிகளின் நிர்வாகிகள் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

# விராலிமலை தொகுதியில் 5 இடங்களில் “மக்களுடன் முதல்வர்” திட்ட முகாம்!

## அமைச்சர்கள் எஸ்.ரகுபதி -முனைவர் கோவி.செழியன் - சிவ.வீ.மெய்யநாதன் மற்றும் கே.கே.செல்லப்பாண்டியன் துவக்கி வைத்தனர்!

புதுக்கோட்டை, ஏப். 16-

புதுக்கோட்டை மாவட்டம், விராலிமலை சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் நடைபெற்ற “மக்களுடன் முதல்வர்” திட்ட முகாம்களில், சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி, உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி.செழியன், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் சிவ.வீ. மெய்யநாதன் ஆகியோர், மாவட்ட ஆட்சித்தலைவர் மு.அருணா தலைமையில் 12.04.2025 அன்று மனுக்களை பதிவு செய்யும் சிறப்பு முகாம்களை பார்வையிட்டு, மக்களிடம் கோரிக்கைகள் குறித்த விவரங்களை கேட்டறிந்து, பயனாளிகளுக்கு பல்வேறு அரசு நலத் திட்ட உதவிகளை வழங்கினார்கள்.

பின்னர் அமைச்சர் எஸ். ரகுபதி தெரிவித்ததாவது:-

முதலமைச்சர் அவர்கள் ஏழை, எளிய பொதுமக்களின் நலனில் மிகுந்த அக்கறை கொண்டு பல்வேறு மக்கள் நலத் திட்டங்களை சிறப்பாக செயல்படுத்தி வருகிறார்கள். அந்த வகையில், அரசுத் துறைகளை அன்றாடம் அணுகும் பொதுமக்களுக்கு, அரசின் சேவைகள் விரைவாகவும், எளிதாகவும் அவர்களைச் சென்று சேரும் வகையில், நிர்வாகத்தில் வெளிப்படைத் தன்மையை ஏற்படுத்திடவும், திராவிட மாடல் ஆட்சியின் மற்றுமொரு மைல்கல்லாக “மக்களுடன் முதல்வர்” என்ற புதிய திட்டத்தை மாநகராட்சிகள், நகராட்சிகள், பேரூராட்சிகள், நகர்ப்புறங்களை ஒட்டியுள்ள கிராம ஊராட்சிகளில் முதலமைச்சர் அவர்கள் 18.12.2023 அன்று தொடங்கி வைத்தார்கள். அதனைத்தொடர்ந்து, இத்திட்டத்தினை முதலமைச்சர் அவர்கள் 11.07.2024 பகுதிகளுக்கும் விரிவுப்படுத்தி தொடங்கி வைத்தார்கள். புதுக்கோட்டை மாவட்டத்தில் நகரப் பகுதிகளில் 28 “மக்களுடன் முதல்வர்” திட்ட முகாம்கள் நடைபெற்றதில், 13,684 கோரிக்கை மனுக்கள் பெறப்பட்டு, 9176 மனுக்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டு உரிய தீர்வுகள் காணப்பட்டுள்ளது. இதே போன்று புதுக்கோட்டை மாவட்டத்தில் 11.07.2024 முதல் 31.08.2024 வரை 13 ஊராட்சி ஒன்றியங்களில் 65 “மக்களுடன் முதல்வர்” திட்ட முகாம்கள் நடைபெற்றதில், 21920 கோரிக்கை மனுக்கள் பெறப்பட்டு, 16,895 மனுக்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டு உரிய தீர்வுகள் காணப்பட்டுள்ளது.

அதனைத்தொடர்ந்து தற்போது, புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள 6 சட்டமன்றத் தொகுதிகளிலும் 60 “மக்களுடன் முதல்வர்” திட்ட முகாம்கள் 3ஆம் கட்டமாக நடைபெற உள்ளது. அதன்படி, கொடும்பாளூர், தென்னம்பாடி, மாத்தூர், விளத்துப்பட்டி மற்றும் கிளிக்குடி ஆகிய ஊராட்சிகளில் நடைபெற்ற “மக்களுடன் முதல்வர்” திட்ட முகாம்கள் நேரில் பார்வையிட்டு, பயனாளிகளுக்கு பல்வேறு அரசு நலத்திட்ட உதவிகளும் வழங்கப்பட்டது.

எனவே பொதுமக்கள் அனைவரும் இந்த முகாமினை நல்ல முறையில் பயன்படுத்திக்கொண்டு, தங்களது கோரிக்கைகளை மனுக்களாக பதிவு செய்து அடிப்படைத் தேவைகளை பூர்த்தி செய்துகொள்ள வேண்டும் எனவும் அமைச்சர் எஸ்.ரகுபதி தெரிவித்தார். பின்னர், உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி.செழியன் தெரிவித்ததாவது;

முதலமைச்சர் அவர்கள் பொதுமக்களின் நலனில் மிகுந்த அக்கறைகொண்டு பல்வேறு மக்கள்நலத் திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள். அந்தவகையில், அரசின் சேவைகள் விரைவாகவும், எளிதாகவும் பொதுமக்களுக்கு சென்று சேரும் வகையில் “மக்களுடன் முதல்வர்” என்ற புதிய திட்டத்தை முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்தார்கள். இத்திட்டத்தின் மூலம் மாநகராட்சிகள், நகராட்சிகள், பேரூராட்சிகள், ஊரக பகுதிகளில் உள்ள பொதுமக்களுக்கு அரசின் சேவைகள் சென்றடையும் வகையில் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. அதனடிப்படையில், விராலிமலை சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் நடைபெற்ற “மக்களுடன் முதல்வர்” திட்ட முகாம்கள் துவக்கி வைக்கப்பட்டுள்ளது.

அதன்படி, விராலிமலை வட்டம், கொடும்பாளூர் ஊராட்சி, நந்தி திடலிலும் மற்றும் தென்னம்பாடி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி கூடுதல் கட்டிடத்திலும் மற்றும் குளத்தூர் வட்டம், மாத்தூர் ஊராட்சி, ராசிபுரம், நாடக மேடை அருகிலும் மற்றும் இலுப்பூர் வட்டம், விளத்துப்பட்டி ஊராட்சி, ஆதிதிராவிடர் காலனி அருகிலும் மற்றும் கிளிக்குடி ஊராட்சி, கூடலூர் ஆதிதிராவிடர் காலனிக்கு அருகில் உள்ள கலையரங்கத்திலும் “மக்களுடன் முதல்வர்” திட்ட முகாம்கள் துவக்கி வைத்து நடைபெற்றது.

எனவே பொதுமக்கள் அனைவரும் தங்களது அத்தியாவசிய தேவைகளை பூர்த்தி செய்திடும் வகையில், இம்முகாம்களை உரிய முறையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் எனவும் அமைச்சர் முனைவர் கோவி. செழியன் தெரிவித்தார்.

பின்னர் அமைச்சர் சிவ. வீ. மெய்யநாதன் தெரிவித்ததாவது:-

முதலமைச்சர் அவர்கள் பொதுமக்களின் தேவைகளறிந்து பல்வேறு நலத்திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள். அந்தவகையில், இத்திட்டங்கள் அனைத்தும் பொதுமக்களுக்கு விரைவாகவும், எளிதாகவும் கொண்டு சேர்த்திடும் வகையில் பல்வேறு சிறப்பு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது. அதனடிப்படையில் “மக்களுடன் முதல்வர்” என்ற புதிய திட்டத்தை முதலமைச்சர் அவர்கள் 18.12.2023 அன்று தொடங்கி வைத்தார்கள். அதன்படி, புதுக்கோட்டை மாவட்டத்தில் பல்வேறு முகாம்கள் நடத்தப்பட்டு, பதிவு செய்யப்பட்டிருந்த கோரிக்கை மனுக்களுக்கு உரிய தீர்வு காணப்பட்டது. அதன் தொடர்ச்சியாக புதுக்கோட்டை மாவட்டத்தில் தற்போது 60 “மக்களுடன் முதல்வர்” திட்ட முகாம்கள் நடத்தப்பட உள்ளது. இம்முகாமில், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத்துறை, கூட்டுறவுத்துறை, எரிசக்தித்துறை, மதுவிளக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை (கலால்), தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை, குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை, சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை, மாற்றுத்திறனாளிகள் நலத்துறை, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை, வேளாண்மை உழவர் நலத்துறை, கால்நடை பராமரிப்புத்துறை உள்ளிட்ட 15 அரசுத் துறைகள் சார்ந்த 44 சேவைகள் வழங்கப்படுகிறது.

எனவே, தமிழக அரசின் மூலம் நடத்தப்படும் இது போன்ற முகாம்களை உரிய முறையில் பயன்படுத்திக் கொண்டு தங்களது வாழ்வாதாரத்தினை மேம்படுத்திக் கொள்ள வேண்டும் எனவும் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் சிவ.வீ. மெய்யநாதன் தெரிவித்தார்.

இந்நிகழ்வுகளில், கே.கே. செல்லப்பாண்டியன், அ.கோ.ராஜராஜன், எம். லியாகத் அலி, மரு.அஞ்சுகம் பூபதி, அ.ஷோபா, ஜி.அமீர் பாஷா, (கலால்) அ.வில்சன், த.சந்திரசேகரன், கே.ஆர். என்.போஸ், ரமேஷ், கே.காமராஜு, பார்த்திபன், பாலசுப்பிரமணியன், அன்னவாசல் எஸ்.அபிராம சுந்தரி, வேலு, க.மதியழகன், எஸ்.எஸ்.கருப்பையா, சு. சண்முகம், தென்னலூர் எம். பழனியப்பன், கே.எஸ்.சந்திரன், மு.பி.ம. சத்திய சீலன், ஆர்.ஆர்.எஸ்.மாரிமுத்து, அ.இளங்குமரன், கே.பி. ஐயப்பன்,

எம்.எம்.பாலு, ஜெயலெட்சுமி தமிழ்ச்செல்வன், எம்.செந்தில்குமார், சின்னையா, புத்தாம்பூர் எம்.சுப்பையா, நடேசன், பூங்குடி எம்.சிவா, விளாப்பட்டி எம். சிவா, பாலசுப்பிரமணியன், ஆனந்தன், எம்.ஆர்.அன்பழகன், சொ.தமிழினியன் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவிப்பிற்கினங்க தஞ்சை வடக்கு மாவட்ட தி.மு.க சார்பில் சமத்துவ நாள் உறுதிமொழி ஏற்பு நிகழ்ச்சி மாவட்டக் கழகச் செயலாளர் சு.கல்யாணசுந்தரம் எம்.பி. தலைமையில் நடைபெற்றது. இதில் கும்பகோணம் சட்டமன்ற உறுப்பினர் சாக்கோட்டை க.அன்பழகன், மாநகரக் கழகச் செயலாளர் சு.ப.தமிழழகன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் குட்டி இரா.தெட்சிணாமூர்த்தி, மாவட்ட அவைத்தலைவர் க.நசீர் முகமது உள்ளிட்ட ஒன்றிய, பகுதி, பேரூர் செயலாளர்கள், மாவட்ட சார்பு அணிகளின் நிர்வாகிகள், கழக முன்னோடிகள் கலந்து கொண்டனர்.




வடகோவையில் உள்ள மாவட்டக் கழக அலுவலகத்தில் நடைபெற்ற ஒருங்கிணைந்த கோவை மாவட்டப் பொறியாளர் அணிக்கான ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழக நிர்வாகிகளுக்கான நேர்காணல் நடைபெற்றது மாநகர் மாவட்ட தி.மு.க. செயலாளர் நா.கார்த்திக் கலந்து கொண்டு தொடங்கி வைத்து வாழ்த்துரை வழங்கினார். கழக பொறியாளர் அணி மாநில துணைச் செயலாளர்கள் கு.சண்முகசுந்தரம் தலைமையில் நடைபெற்ற நேர்காணல் நிகழ்ச்சியில் கழக பொறியாளர் அணிமாநில துணைச் செயலாளர் அம்பாள் நந்தகுமார், பொறியாளர் அணி அமைப்பாளர் நா பாபு, பிரபாகரன், மாவட்ட துணைச் செயலாளர்கள் கோட்டை அப்பாஸ், கல்பனா செந்தில், மாநில மாணவரணி துணைச் செயலாளர் வி.ஜி.கோகுல் உள்ளிட்ட ஒருங்கிணைந்த கோவை மாவட்டத்திற்கான ஒன்றிய, பகுதி, பேரூர் கழகத்திற்கு உட்பட்ட பதிவு செய்த உறுப்பினர்கள் பங்கேற்றனர்.



# தி.மு.க. இளைஞர் அணி

## ஊராட்சிக் கிளை மற்றும் நகர - பகுதி - பேரூர் வார்டு அமைப்பாளர்-துணை அமைப்பாளர்கள் தேர்வு

கழக இளைஞர் அணிச் செயலாளர் **உதயநிதி ஸ்டாலின்** அறிவிப்பு

கழக இளைஞர் அணியின் ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் அமைப்புகளுக்கு அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் நியமிக்கப்பட்டு, அறிமுகக் கூட்டங்கள் நடைபெற்று வருகின்றன.


இந்நிலையில், அடுத்தகட்டமாக ஒன்றியத்தில் ஊராட்சிக் கிளைகளிலும், நகரம், பகுதி, பேரூர் வார்டுகளிலும் உள்ள இளைஞர்களை ஒருங்கிணைத்து, கழகப் பணியாற்றும் வகையில், கழகத் தலைவர் அவர்களது உத்தரவின்பேரில் தலைமைக் கழகத்தின் ஒப்புதலுடன், இந்த அமைப்புகளுக்கு இளைஞர் அணி நிர்வாகிகளை நியமிக்க முடிவெடுக்கப்பட்டுள்ளது.

ஊராட்சிக் கிளைகள் மற்றும் நகர வார்டுகளில் 1 அமைப்பாளர், 3 துணை அமைப்பாளர்கள் என்ற அளவிலும், பகுதி வார்டுகளில் 1 அமைப்பாளர், 5 துணை அமைப்பாளர்கள் என்ற அளவிலும், பேரூர் வார்டுகளில் 1 அமைப்பாளர், 2 துணை அமைப்பாளர்கள் என்ற அளவிலும், நிர்வாகிகள் தேர்வு செய்யப்பட உள்ளனர்.

இந்தப் பொறுப்புகளில் செயல்பட விரும்பும் இளைஞர்கள், கீழே கொடுக்கப்பட்டுள்ள விண்ணப்பத்தை நிரப்பி, உரிய ஆவணங்களுடன் மாவட்டக் கழகச் செயலாளரிடமோ, மாநில துணைச் செயலாளரிடமோ, மாவட்ட அமைப்பாளரிடமோ அல்லது அன்பகத்திலோ வழங்கலாம்.

### விதிமுறைகள்

- 18 முதல் 35 வயதுடையோர் மட்டும் இப்பொறுப்புகளுக்கு விண்ணப்பிக்கவும்.
- முரசொலியில் வெளியிடப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பத்தை நகல் எடுத்து விண்ணப்பிக்கலாம். மாவட்டக் கழக அலுவலகம், மாவட்ட அமைப்பாளர் மற்றும் அன்பகத்திலிருந்தும் விண்ணப்ப நகலைப் பெற்று விண்ணப்பிக்கலாம்.
- விண்ணப்பத்தில் கேட்கப்பட்டுள்ள அனைத்து விவரங்களையும் தெளிவாக, முழுமையாக நிரப்பி, பாஸ்போர்ட் அளவு கலர் புகைப்படம் ஒட்டி விண்ணப்பிக்க வேண்டும்.
- விண்ணப்பத்துடன் வாக்காளர் அடையாள அட்டை, கல்விச் சான்றிதழ் நகல் இணைப்பது அவசியம்.
- இதுவரை ஆற்றிய கழகப் பணிகள் குறித்த ஆவணங்கள் இருக்கும்பட்சத்தில் அவற்றின் நகல்களை விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்பலாம்.
- ஏப்ரல் 30-க்கு மேல் தாமதமாக வரும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.
- கிளை மற்றும் வார்டு பொறுப்புகளுக்கு விண்ணப்பிப்பவர்கள் அதன் எல்லைக்குள் வசிப்பவர்களாக இருப்பது அவசியம்.



### தி.மு.க. இளைஞர் அணி

கிளை, வார்டு அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் சுயவிவரப் படிவம்

கழக மாவட்டம் : ........................................

சட்டமன்றத் தொகுதி : ........................................

ஒன்றியம், ஊராட்சி, கிளை : ........................................

நகரம் / பகுதி / பேரூர், வார்டு : ........................................

விண்ணப்பிக்கும் பொறுப்பு : ☐ அமைப்பாளர் ☐ துணை அமைப்பாளர்

பெயர் : ........................................

தந்தை பெயர் : ........................................

பிறந்த தேதி : ........................ வயது........................

கல்வித் தகுதி : ........................................

தொழில் : ........................................

முகவரி : ........................................
........................................
........................................ PIN: ..................

வாட்ஸ்-அப் எண் : ........................................

மின்னஞ்சல் முகவரி : ........................................

இப்படிவத்தில் குறிப்பிட்டுள்ள எனது விவரங்கள் அனைத்தும் உண்மை என உறுதியளிக்கின்றேன்.

நாள் : (கையொப்பம்)

குறிப்பு : 1) படிவத்தில் விவரங்களைத் தெளிவாகப் படிக்கும்விதமாக பூர்த்தி செய்ய வேண்டும்.
2) புகைப்படம், வாக்காளர் அடையாள அட்டை / ஆதார், கல்விச் சான்றிதழ் கண்டிப்பாக இணைக்க வேண்டும்.

“அன்பகம்”
தேனாம்பேட்டை
சென்னை-18
நாள் : 14-04-2025

கலைஞர் 100 1924 - 2023

**உதயநிதி ஸ்டாலின்**
செயலாளர்,
தி.மு.க. இளைஞர் அணி